128
OPEN UNIVERSITY OF SRI LANKA LIBRARY

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
முன்-பள்ளிக் கல்விச் சான்றிதழ் நிகழ்ச்சித்திட்டம்
முதலாம் அரையாண்டு இறுதிப்பரீட்சை – 2009

**ESC 1124/ESC 1135 –** ஆக்கச் செயற்பாடும் கையாளும் திறமைகளும்

காலம் : இரண்டு(02) மணித்தியாலங்கள்

---

திகதி: 05.07.2009 நேரம்: மு.ப 10.00 – ந..ப 12.00

---

ஒவ்வொரு பகுதியிலிருந்து ஆகக் குறைந்தது ஒரு வினாவையாவது தெரிவு செய்து எல்லாமாக நான்கு வினாக்களுக்கு விடை தருக. ஒவ்வொரு பகுதிகளின் விடையையும் வெவ்வேறு புத்தகங்களில் எழுதப்படல் வேண்டும்.

## பகுதி – அ

1. (i) கையாளுந்திறன் என்பதால் கருதப்படுவத யாதென விளக்குக. (05 புள்ளிகள்)

   (ii) கையாளுந்திறன் விருத்திக்காக பின்வரும் செயற்பாடுகளை எவ்வாறு செய்வீர்கள் என விளக்குக.

   (அ) தண்ணீரூற்றுதலும் கழுவுதலும்
   (ஆ) உருவங்கள் செய்தல்
   (இ) துள்ளுதல், குதித்தல்
   (ஈ) அடுக்குக் கட்டைகளால் கட்டுதல்

   (20 புள்ளிகள்)

2. (i) முன்பள்ளியில் அழகியற் கல்வி வழங்கப்படுவதன் நோக்கங்களைத் தருக. (05 புள்ளிகள்)

   (ii) மேலே குறிப்பிடப்பட்ட நோக்கங்களை அடைவதற்காக 4வயது, 5 வயது பிள்ளைகளுக்கு வழங்கக் கூடிய செயற்பாடொன்றைக் குறிப்பிடுக. (10 புள்ளிகள்)

   (iii) மேலே குறிப்பிடப்பட்ட செயற்பாட்டில் பயன்படுத்தக்கூடிய உபகரணங்கள்/சாதனங்களின் பட்டியலை எழுதுக. உபகரணங்களை/சாதனங்களை எவ்வாறு பயன்படுத்துவீர்களென விளக்குக (10 புள்ளிகள்)

## பகுதி – ஆ

3. (i) முன்பள்ளிப் பிள்ளைகளுக்காக கதையொன்றை உருவாக்கும் போது கவனத்தில் கொள்ள வெண்டிய நான்கு தத்துவங்களைத் தருக. (12 புள்ளிகள்)

   (ii) இத் தத்துவங்களுக்கமைய கதையொன்றை எழுதுங்கள்

4. (i) ‘இசையும் அசைவும்’ பிள்ளைகளின் பூரண விருத்திக்கு எவ்வாறு துணைபுரிகின்றவெனப் பரிசீலிக்க. (25 புள்ளிகள்)

## பகுதி - இ

5. மணல். தண்ணீர் மற்றும் களி (clay) என்பவற்றைப் பயன்படுத்திச் செய்யப்படும் செயற்பாடுகள் முன்பள்ளிப் பிள்ளைகளின் வாசிப்புத் திறன், எழுத்துத்திறன் என்பவற்றின் விருத்திக்கு எவ்வாறு பங்களிப்புச் செய்கின்றவென விளக்குக.

(25 புள்ளிகள்)

6. முன்பள்ளி ஆசிரியரொருவர், முன்பள்ளிப் பிள்ளைகளின் சித்திரம் மற்றும் ஆக்கச் செயற்பாடுகளுக்கு எவ்வாறு துணைபுரிய முடியுமென பொருத்தமான உதாரணங்களுடன் விளக்குக.

(25 புள்ளிகள்)

(பதிப்புரிமை பெற்றது)